# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூச] யாழ்ப்பாணம்:- நந்தன வருஷ புரட்டாதிமீ கஅ உ வெள்ளிக்கிழமை (3 Octo. 1952) [இல - சஅ]


# பல்கலைக் கழகம் ஒன்றைப் பரந்தனில் நிறுவுங்கள்

## கமத்தொழில் கை வந்த நியாயதுரந்தரர் கூற்று

கிளிநொச்சிப் பகுதியில் ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்து வைக்கும் அமயம் பிரபல நியாயதுரந்தரரும் அரசியல்வாதியும் இந்துசாதன ஆங்கிலப் பழைய பத்திரிகாசிரியரும் கமத்தொழில் ஆர்வம் மிக்கவரும் ஆகிய திரு. A V. குலசிங்கம் அவர்கள் உழவு தொழில் நிலையத் தருகாமையிற் பல்கலைக் கழகம் நிறுவப்படுதலே மிகமிகப் பொருத்தமானதெனச் சொல்லினர்.

அவர்மேலும் கூறியதாவது:

இன்று உலகில் கமத்தொழிலில் சிறப்புற்று விளங்கும் நாடு அமெரிக்காவேயாகும். இதற்குக் காரணம் அந்நாட்டு மக்கள் நிரம்பிய கல்வியறிவுள்ளவர்களாக இருப்பதுதான். 25 ஆண்டுகளுக்கு முன் கமத தொழிலிற் கரைச்சிப் பகுதி இருந்ததிலும் பார்க்க இன்று எவ்வளவோ மேம்பட்டிருக்கின்றது. இதற்குக் காரணம் இப்பகுதி மக்களின் அறிவு வரவா அபிவிருத்தி யடைவதேயாகும். எனவே கமத் தொழில் விருத்திக்குக் கல்வியே முக்கிய சாதனமாகும்.

### ஆசிரிய மாணவர் தொடர்பு

முற்காலத்தில் ஆசிரியருக்கும் மாணவருக்கு மிடையில் நெருங்கிய தொடர்பிருந்தது. மாணவருடைய வாழ்க்கை ஆசிரியருடைய வாழ்க்கையைப் பின்பற்றியதாகவே இருந்து வந்தது. ஆனல் இக்காலத்திலோ ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையில தொடர்பு கிடையாது. அக்காலக் கல்வியின் முக்கியநோக்கம் மாணவர்களுடைய ஆத்மீக வளர்ச்சியாகும். இக்காலத்தில் அது வியாபாரக் கல்வியாக மாறிவிட்டது.

### அரசினரின் பராமுகம்

நமதுநாடு சுயராச்சியமடைந்தும் அரசாங்கம் கல்வி விஷயத்தில் அதிக கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. எந்த நாடு கல்வி விஷயத்தில் பராமுகமாக விருக்கின்றதோ அந்நாட்டின் வளர்ச்சி மந்தமாகவே யிருக்கும். இது சரித்திரங் கண்ட உண்மை.

### சமயங்கள் கூறும் உண்மை

எல்லாச் சமயங்களிலும் உண்மைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனல் சைவ சமயமோ மற்றச் சமயங்கள் சொல்லுகிற உண்மைகள் எலலாவற்றையும் கூறுவதுடன் நில்லாது வேறும் பல உண்மைகளையும் எடுத்துக் கூறுகின்றது. பிற மதத்தவர்கள் நமக்குத் துன்பஞ் செய்கிறார்களெனச் சிலர் கருதுகின்றனர். இதனை நாம் முற்றாக ஆமோதிக்க முடியாது. நாம் சோம்பேறிகளாக இருப்பதினாற்றான் மற்றவர்கள் தங்கள் சமய விருத்தி கருதிச் செய்கின்ற முயற்சிகள் நமக்கு மாறுபாடானவைகளாகக் காணப்படுகின்றன.

### சர்வகலாசாலை

தமிழர்களுக்கெனப் புறம்பான சர்வகலாசாலையொன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென அறிஞர்கள் கூறுகின்றார்கள். அவ்வாறு அக்கலாசாலை ஆரம்பிக்கப்படுவதானல் அது இப் பகுதியிலேயே நிறுவப்பட வேண்டும். அக்கலாசாலையில் கைத்தொழில் முதலான வாழ்க்கைக்குரிய கல்விகளெல்லாம் கற்பிக்கப்படவேண்டும்.

### ஆர்வத்தினுற் குடியேறினேம்

25 வருடங்களுக்கு முன் நாம் இங்குவந்து பணஞ் சம்பாதிக்கும் நோக்கத்துடன் மட்டும் குடியேறவில்லை. அக்காலத்திற் காடுகொன்று நாடாக்கிக் கமத்தொழிலை ஆரம்பிப்பதற்குப் பெருந் தொகைப் பணஞ் செலவு செய்ய வேண்டியிருந்தது. நுளம்புகளுடன் போராட வேண்டியிருக்கின்றது. மண்டித் தண்ணீரைக் குடிக்கவேண்டியிருந்தது. பிரயாணக் கஷ்டங்களைச் சகிக்கவேண்டி இருந்தது. இத்தகைய இடையூறுகளுக்கிடையேயும் நாம் இன்று வரை நிலைத்திருப்பது அத்தொழிலிற் கொண்டுள்ள ஆர்வமேயாகும்.

உ

## முதலந்தமாயினனே! முடிவறியேன்

திருச்சிற்றம்பலம்.


வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேட னென்பாய்போல
இனையனு னென்றுன்னை யறிவித் தென்னை
யாட்கொண்டெம் பிரானுனைக் கிரும்பின் பாவை
அனையநான் பாடேனின் றுடே னந்தோ
அலறிடே னுலறிடே னவிசோரேன்
முனைவனே முறையோநா னனவாறு
முடிவறியேன் முதலந்த மாயி னனே.

திருச்சிற்றம்பலம்.

'இன்னு செய்தாரை ஒறுத்தல்
அவர் நாண
நன்னயஞ் செய்து விடல்'

இவர் இதன்
பொழிப்பு உருவம்

அன்பால் அரசர்களை
ஆண்ட அதி உத்தமர்.



பிறந்த தின ஞாபக வாரம்.

# தமிழ் வழி வந்த மலையாளம்

### செய்யுள் அமைதி

செய்யுளின் இலக்கண அமைதியை இனி நோக்குவோம். "லீலா திலக"த்தில் தமிழ் எழுத்துக்களால் அமைந்து எதுகை மோனையடையதாய் வரும் விருத்தவகையே "பாட்டு" எனப் பாட்டினது இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. மலையாளத்திலுள்ள அதி பிராசீன நூலாகிய ராமசரிதம் "பாட்டு" என்ற முறையில் அமைந்ததாம். தமிழில் இவ்விலக்கணத்திற்கேற்ப வரும் விருத்தப் பாக்கள் இடைக்காலத்தில் தோன்றத் தொடங்கி அதன் பிற்பகுதியிலும் பிற்காலத்திலும் மிகவும் பிரசாரம் எய்தியுள்ளன. எனவே ராமசரிதப் பாட்டுக்கள் பிற்காலத் தமிழ்-இலக்கியத்தை யொட்டி யமைந்தன என்று தடையின்றிக் கூறலாம்.

மேற்காட்டிய ராமசரிதப் பாட்டில், ஈவண்ணம், புரிகுழலாளே, ஓரிக்கால், களக, இப்போழ் முதலிய மலையாளச் சொற்கள் தமிழினது திரிந்த வடிவங்களே. மற்றச் சொற்கள் தமிழ் வடிவத்திலேயே உள்ளன. ஆகவே ராமசரிதகாலமாகிய 14-ம் நூற்றாண்டளவில்தான் தமிழிலிருந்து வேறுபட்டு மலையாளம் ஒரு தனி மொழியாகப் பரிணமித்திருக்க வேண்டுமென்று கருதலாம்.

### சாசனச் சான்று

இங்ஙனம் வேறுபடத் தொடங்கிய காலத்தைச் சாசனங்களால் ஒருவாறு வரையறுத்தல் கூடும். மலையாளநாட்டில இப்போதுள்ள சாசனங்களில் ... பழமையானது ...தில் தளியல் என்ற இடத்திற் காணும் சிவன்கோயிற் சாசனமாகும் இது கி. பி. 930 - ஆம் ஆண்டளவில் தமிழில் எழுதப்பட்டுள்ளது. வேறொரு பழைய சாசனம் கவியூரில் உள்ளது. அதில் ஒரு பகுதி வருமாறு:—

"கலியுகர் தொடங்கி
நாலாயிரத்து அம்பத்தோரா
மாண்டு திருக்
கவியூர்ப் பட்டாரர்க்கு
மகிழஞ்சேரித்
தேவன் சேந்நன்
திருவிளக்கும் திருவமுதும்
திருவககமும்
திருச் சந்நணமும்
திருப்புகையும் அமைச்சான்.

இதன் காலம் கி. பி. 950. இதில் பேச்சுவழக்குத் தமிழும் சேந்நன் முதலிய தமிழொலி மாறிய மலையாள வடிவங்களும் காணப்படுகின்றன.

இச்சாசனங்களால் கி. பி. 10 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து தமிழ் திரிந்து மலையாள மொழியாய் அமையத்தொடங்கிற்று என ஐயமின்றித் துணியலாம். இக்காலத்திற்கு முன்பு ஒலிமாற்ற முதலியன நேர்த்தமைக்கு யாதொரு சான்றுமிலலை. நேர்மாறாக, இதற்கு முன்புள்ள சேரநாட்டுக் கவிஞர்கள் அனைவரும் நல்ல தமிழிலேயே பாடியிருக்கின்றனர். குலசேகராழ்வார், சேரமான்பெருமான் நாயனர், சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் முதலியோரை உதாரணமாகக் காட்டலாம். சங்க காலத்திற்குச் செல்வோமானல் "பதிற்றுப் பத்து" என்ற தொகை நூலைக் காண்கின்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

திரு. L. M. D. சில்வா Q. C. அவர்கள் உயர்நீதிமன்ற நீதிபதியாய் நியமிக்கப்பெற்றிருக்கின்றர்.

அரசியல் அலை

# அரசியற் கட்சிகளின் - அந்தரங்க நோக்கம்

## ஆதிக்கமும் அதிகாரமும் பெறுவதா?

மேற்சபைத் தலைவர் தெரிவிலிருந்து சில இரகசியங்கள் பரம்பியிருக்கின்றன. ஐக்கியதேசியக்கட்சியிலிருந்த ஒருவர் சிறிது காலத்துக்குமுன் அதினின்றும் விலகினர்; பின்னர் சேர்ந்தார். தலைவர் பதவி நிரப்பப்படவேண்டி இருந்தது. அப்பதவியை நாடினர். அது கிடைக்கவில்லை மறுபடியும் கட்சியை விட்டகன்றனர். இதுதான் சுருக்கமான விபரம்.

ஆகவே கட்சியென்ருல் அதிகாரம் ஆதிக்கம் பெறும் ஒரு சாதனம் என்று புலப்படுகின்றது. பல்கலைக்கழக மன்றம் ஒன்றுக்குப் பிரதிநிதிகள் பாராளுமன்றத் திற்றெரிவு செய்யப்பட்டபோதும கட்சி ஆதிக்கம் தாண்டவம் ஆடியது; இக்கொள்கைக்குச் சான்றாகின்றது.

இது ஒருபுறம்; மறுபுறத்தில் எதிர்க்கட்சிகள். அவர்கள் பொதுசன அங்கீகாரம்பெற்ற மக்களின் உணர்ச்சி வேகத்தில் உதைக்கும் கதைகள் சொல்லித்திரிவது. பொதுவாக நாட்டின் நிலைமையையும் ஊரவர்களின் சீரான வாழ்க்கையையும் நன்கு பரிபாலிக்கவே கட்சிகள் உண்டாக வேண்டுமென்பது சனநாயக முறை. பொதுசனத்தை அரசாங்கக்கட்சி அதிகாரம் ஆதிக்கம் காட்டியும் எதிர்க்கட்சிகள் ஆத்திரம் கூட்டியும் தம்பால் இழுத்துவிடுங் கொள்கை இராசதந்திரம் என்ற வகையில் வாராது இது அவதந்திரமேயாகும்.

அரசாங்கப் பொறுப்பைக் கைப்பற்றி விடுவதுதான் கட்சிகளின் முக்கிய நோக்கமுமாயிருப்பது நன்கு புலனாகின்றது. இந்த நிலைமை இங்கு மாத்திரமன்று இதர நாடுகளிலும் இருக்கின்றது. எனவே அரசியல் அறிவு இன்னமும் நல்லாய்ச் செறியவில்லை எனறே சொல்ல வேண்டும். இந்தக் குறையைத் தீர்ப்பவர்களே மக்கள்தம்தொண்டர்களாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹூ புரட்டாதிமீ
கஅ உ வெள்ளிக்கிழமை

## காந்திப்பெரியார் காட்டிய வழி

'இந்தியாவினின்றும் ஏகி விடுங்கள்' என்று கட்டளைகற்பித்தார் மகாத்மா. யாருக்கு? இணையற்ற ஏகாதிபத்தியத்துக்கு. என்ன நிகழ்ந்தது? அபார சத்தியின் போர்க்கறை என்றுணர்ந்தனர்; இதயங் கலங்கினர். இனி வேறு வழி இல்லையென் றிசைந்தனர். இது உலக சரித்திரத்தின் ஒப்புவமையில்லா ஒருபகுதி. தோள் வலிமையால் நாடுகளை அடிமைப் படுத்தி, ஆட்சிபுரிந்து வந்த வல்லரசுகளுக்குப் பாடங் கற்பிக்கும் ஒரு அத்தியாயம். ஆகவே அகில உலகுக்கும் அறிவுறுத்தும் வாழ்க்கை நடத்திய மனித தத்துவத்தின் புனிதப்பேராற்றல் கொண்ட இப் பெரியாரை உண்மை ஆர்வத்தோடு நினைவு கூர்ந்து வருபவர்களும் அந்த அரிய ஆற்றலில் ஒரு அணுவளவாவது பெறுவர்.

காந்திப் பெரியாரைக் காசினி போற்றுவதற்குக் காரணம் ஆங்கிலேய வல்லரசை ஆசியாக் கண்டத்தினின்றும ஆருமறியாது ஆயுதம் எடாது பெயர்த்து விடச் செய்த பெருமை மாத்திரமன்று. இந்த உத்தமர் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தமையே அன்னாரைத் தெய்வத்துள் மாநிலத்தார் வைத்துப் பாராட்டச்செய்தது. மனித வாழ்க்கையை புனித மூடைத்தாக்குதல்வேண்டும்என்று எண்ணிக் கருமம் ஆற்றினர். மனத்துக்கண் மாசிலராகி அழுக்காறவா வெகுளி இன்னச்சொல் கடிந்து அரசியல் அவனியில் அறன் வலியுறுத்தியவர் காந்திப் பெரியார் என்ருல் அவர் தம் ஆற்றல் பேராற்றல் அன்ரே? அமைதியை நாடி அடவிக் காட்டினிற் சென்று ஐம்புலனடக்கி ஆன்ம ஈடேற்றம் பெற்று அரன் கழல் அடையக்கூடிய இறைஞானம் நிரம்பப்பெற்ற இவர் அவ்வாறின்றி அமைதியின்மை ஆதிக்கஞ் செய்யும் அரசியலுலகிலும் ஐம்புலனை அறிவெனுந் தோட்டியாற் காப்பாற்றி இறை வாழ்வுக்கு வித்திடலாம என்ற உண்மையை நிலைநாட்டஎண்ணிச்செயற்கரிய செய்த அரசியற்றுறவியின் பெருமையளவிடற் பாற்ரே! மன்மாட்சிக்குத் தக அறிவறிந்த நன்மக்கட் பேறும் நன்கலன் உடையவராய் அகத்துறுப்பில் அன்புகொண்டு வறுமைப்பட்டோரைவிருந்தாயோம்பி வன் சொல் வழங்காது நயனுடை நெஞ்சினராகி மாசற்ருர் கேண்மை மறவாது உட்கோட்டமில்லா வுயர்நிலையால் ஒருபாற்கோடாது இல்லறத்தினின்றுந் திரியா தடங்கி ஒழுக்கமுடைமையாற் றீய வழுக்கியும் சொல்லாது கற்பின் பொற்பைக் கண்ணியப்படுத்திப் பொன்றுந் துணையாம் புகழ் அளிக்கும் பொறுமையு முடையராய்ப் பிறன் ஆக்கம் பேணுது பிறன் வேண்டும் கைப்பொருள் வெஃகாது புறங்கூறிப் பொய்த்துயிர் வாழாது பயனில் சொற்பகராது மறந்தும் பிறன்கேடு சூழாது மன்னுயிர் ஓம்பி அருள் ஆண்டு உயிரிற்றலைப் பிரிந்த ஊன் உண்ணுது நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டாராய்த் தன்னெஞ்சுதானறிகுற்றப்படாது மற்றையோர் பொருள் உள்ளத்தாலும் உள்ளாது வாய்மையால் அகத்தூய்மை அடைந்து வெகுளியை மறந்து எனைத்தானும் எஞ்ஞான்றும் எவர்க்கும் இன்னு செய்யாது நன்னயம் புரிந்து யாதொன்றும் கொல்லா நல்லாறு நின்று உடம்பொடுயிரிடை நட்பின் உண்மை நிலை அறிந்து மாயவுலகில் மாசற்ற மாண்புடன் வாழ்ந்த பெருமை மகாத்மா காந்திக்குரியது.

இப் பெற்றி வாய்ந்த ஒருத்தமரின் நினைவை எவ்வாறு ஞாபகப்படுத்துவதென்பதறியாது வேடிக்கை விழாக்கள் போன்ற பலர் கூடி உரையாடி இன்னிசை விருந்தருந்திப் பொழுது போக்குகின்றனர்! காந்தி தினத்தன்று அடுத்தாண்டுக்கு ஆக்கவேலைத் திட்டம் போட்டு அப்பெரியார் பரிந்துழைத்த மதுவிலக்கு, பொய்யாமை, ஊக்கமுடைமை, ஒற்றுமை மனப்பான்மை, அன்பிலெழுந்த சமத்துவம் கற்பைக் கண்ணியப்படுத்தல் போன்ற நற்பணிகளில் ஒன்றையேனும் அடிப்படையாகக்கொண்டு அந்த அயலிற்ரெண்டாற்றியடுத்தாண்டு அதே போன்று இன்னேர் பணியை எடுத்துச்செய்து இவ்வாறு செயலாற்றி மகாத்மாவை நினைவுறுதலே நன்று.

---

## 115 அடி நீளக் கடிதம்

ஜெர்மன் பட்டணத்தைச் சேர்ந்த L. மரேக் என்பவர் சில வாரங்களுக்கு தனது மனைவியிடம் இருந்து கடிதம் எதிர்பார்க்கத் தேவையில்லை. ஏனெனில் இவருக்கு இவரது மனைவி 115 அடி நீளமுள்ள கடிதமொன்றை அனுப்பி இருக்கிருராம். இவரது மனைவி இக் கடிதத்தை எழுதி முடிக்க ஒரு வாரம எடுத்ததாகத் தெரிகின்றது.

### மானிப்பாய் கிறீன் ஞாபக
# வைத்தியசாலை

மானிப்பாயில் நடந்த பொதுக்கூட்டத்தில் மேற்படி வைத்தியசாலை விடயமாக அரசாங்கத்துடனும் பரிபாலன சபையுடனும் தொடர்புவைத்து நடவடிக்கை எடுக்க ஓர் உப சபை தெரியப்பட்டது. அச் சபைக்கு அரசாங்க மேற்சபை அங்கத்தவர் திரு. P. நாகலிங்கம் அவர்களைத் தலைவராகவும் திரு. T. S. சண்முகதாசன் அவர்களைக் காரியதரிசியாகவுங் கொண்டு ஐவர் அடங்கிய ஓர் குழு 22-9-52 ல் பிஷப் வண S. குலேந்திரன் அவர்களிடம் மேல்வரும் விடயங்களைச் சமர்ப்பித்து பெரும்பான்மையான விடயங்கள் வைத்தியசாலைப் பரிபாலன சபையாரால் ஆலோசிக்கப்பட்டு வருவதாயும் அவை ஏற்கப்படக்கூடியன என்றும் தாம் இவற்றைப் பரிபாலன சபைக்குச் சமர்ப்பித்து மறுமொழி அனுப்புவதாகவும் பிஷப் அவர்கள் கூறினர்.

#### விஷயங்கள்

1 வெளி நோயாளர் சாலையில் ஓர் வைத்தியர் எந்நேரமும் இருக்கக்கூடிய ஒழுங்கு செய்தல்.

2 சிறந்த தகுதியுள்ள வைத்தியர்களை நியமித்தல்.

3 பரிபாலன சபையில் வட்டுக்கோட்டைப்பிரதிநிதிக்கும், மானிப்பாய்ப் பட்டின சங்கத் தலைவருக்கும் இடங் கொடுத்தல்.

4 மத்தியதர வகுப்பினருக்குக் குறைந்த வாடகையில் அறை உதவக்கூடிய கட்டடம் அமைத்தல்.

5 காவற்காரன் இருப்பதற்கு வசதியான ஓர் இடம் அமைத்தல்.

6 இரத்தம் பரிசோதிப்பவருக்குப் பயிற்சி அளித்தல அல்லது உதவியாளரை நியமித்தல்.

---

## புதிய தமிழ்ப் பாடசாலை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆவரங்கால் என்னுமிடத்தில், சைவ வித்தியா விருத்திச்சங்க காரியதரிசி திரு. S. இராசரத்தினம் ஓர் புதிய தமிழ்ப் பாடசாலையைத் திறந்து வைத்தார். திறப்புவிழா வைபவம் விஜயதசமி தினத்தன்று நடைபெற்றது. அப் பாடசாலைக்கு அவ்வூர் மக்கள் விசேஷமாக வழிபடும் தெய்வத்தின் பெயர் சூட்டப்பட்டது. இதில் ஏறக்குறைய இருநூறுக்கு மேற்பட்ட பிள்ளைகள் கல்விகற்கக் கூடுமென அறிய வருகின்றது.

## தாய் மொழியிலே தந்திபேச ஏற்பாடு

தாய்மொழியிலே அரசாங்க அலுவல்களை நடத்துங் கொள்கையைப் பின்பற்றித் தபால் தந்திப்பகுதி மந்திரியார் திரு. சு. நடேசன் அவர்கள் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, காலி, குருநாக்கல் போன்ற பிரதம நகரங்களிலுள்ள தபால் நிலையங்களிலே தாய் மொழியில் எழுதப்பெற்ற தந்திகள் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒழுங்குகளைச் செய்திருக்கிருரென அறியக்கிடக்கின்றது.

---

### யாழ்ப்பாண
# ஐக்கிய பண்டசாலைச் சமாஜம்
## எட்டாம் ஆண்டுப் பொதுக் கூட்டம்

மேற்படி சமாஜத்தின் எட்டாம் ஆண்டுப் பொதுக்கூட்டம் 27-9-52 சனிக்கிழமை காலை 10 மணிக்கு சமாஜக் கந்தோரில் தலைவர் திரு. S. பதஞ்சலி M. B. E, அவர்கள தலைமையின் கீழ் நடைபெற்றது அங்கத்துவ சங்கப் பிரதிநிதிகளும், ஐக்கிய சங்கப் பரிசோதகர்களும வடபகுதி ஐக்கிய சங்க உதவிப் பதிவு காரியஸ்தர்களும் சமூகமாய் இருந்தனர்.

அங்கத்துவ சங்கங்கள் 41ம் இன்னுஞ் சில தனிப்பட்ட சங்கங்களும் சமாஜத்தில் 19 இலட்சம் ரூபா பெறுமதியான வியாபாரஞ் செய்த வகையால் செலவு நீங்கிய இலாபமாக ரூபா 17610-03 காணப்பட்டது.

உதவிப் பதிவு காரியஸ்தர் அவர்கள் சமாசத்தின் வேலை திருப்திகாமாக நடந்து வருவதையிட்டு மெச்சியதுடன் சொந்தக் கட்டடம் ஒன்று இல்லாத குறையையும் சுட்டிக் காட்டினர்.

முன் இருந்த கட்டட நிதிய[illegible]டன இவ்வருடமும் ரூபா 6300 அந்நிதிக்கு ஒதுக்கி ஒரு நிலையான கட்டடம் வாங்கவும் நிறைவேறியது. சமாஜப் பணியாளருக்கு ஒவ்வொரு மாசச் சம்பளம் 'போனஸ்' ஆகக் கொடுக்கத் தீர்மானிக்கப் பட்டது.

நிருவாகிகளுக்கு நன்றி கூறுவதுடன் சமாசத் தலைவர் திரு. S. பதஞ்சலி M. B. E, அவர்களுக்கு அண்மையில அரசினரால J. P., U. M. பட்டம் வழங்கப்பட்டதையிட்டுச் சமாஜம் மகிழ்சியடைவதுடன அவரது சேவையையும் பாராட்டுகிறது என்ற தீர்மானமும் நிறைவேறியது.

தொடர்ந்து கூடிய நிருவாகிகள் கூட்டத்தில் புது வருடத்துக்குரிய உத்தியோகத்தர் பின்வருமாறு தெரியப்பட்டனர். தலைவர் திரு. S. பதஞ்சலி M. B. E, J P. U M. அவர்கள் (வண்ணர்பண்ணை) உபதலைவர் திரு. A. முத்துத்தம்பி இளைப்பாறிய O. A. அவர்கள் (கொக்குவில்) தனதிகாரி திரு. V. C. கனகரத்தினம் அவர்கள் (சுண்டிக்குளி) காரியதரிசி திரு. K. P குமாரசாமி அவர்கள் (கொண்டாவில்) உபகாரியதரிசி திரு. C. மாணிக்கவாசகர் அவர்கள். (சிவியாதெரு)

---

## விரிவுரையாளருக்கு வரவேற்பு

அராலி தெற்கு சரஸ்வதி வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வி பயின்று இலங்கைப் பல்கலைக்கழக B.A. (Hons) [தமிழ்] பரீட்சையில் 1-ம் பிரிவிற சித்தியெய்தி ஆங்கு விரிவுரையாளராகக் கடமையாற்றும் பண்டிதர் ஆ சதாசிவம் அவர்களைக் கௌரவிக்கும்முகமாக அப் பாடசாலைப் பழையமாணவர் சங்கத்தினுதரவில் ஓர் கூட்டம் 29-9-52ல் சங்கத்தலைவர் திரு. மு. சதாசிவம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது, பல அறிஞர்கள் பண்டிதாவர்களின் அறிவையும் குணநயங்களையும் புகழ்ந்துரைத்தனர். சங்கச்சார்பில் திருத்தொண்டர்புராணத்தின் இரு பகுதிகள் பரிசிலாகவழங்கினர். பண்டிதாவர்களின் பதிலுரை நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவுற்றது.

---

## நேரம் பிந்தி வருவதென்ருற் புகையிரதந்தானே!

சென்ற சனிக்கிழமை மட்டக்களப்பில் நகரசபைக் கூட்டமொன்று கூடியது. அதில் முக்கியமாகப் புகையிரதங்கள் குறித்த நேர அட்டவணையின்படி வாராது பிந்தி வருவதைக் கண்டித்து, வருங்காலத்தில் நேர அட்டவணையினபடி புகையிரதங்கள் ஓட ஏற்பாடு செய்யும்படி போக்குவரத்து மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதேபோல் யாழ்ப்பாணத்திலும் புகையிரதங்கள் அதிகமாக நேரந் தப்பியே வருகின்றன, ஆனல் இதைக் கண்டித்துக் குறித்த நேரத்தின்படி ஓடச் செய்யும்படி, ஒருவராவது அல்லது நகரசபையாவது போக்குவரத்து மந்திரியையோ அல்லது புகையிரதஸ்தான அதிபரையோ கேட்கவில்லை. இதனுல் பொது மக்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். ஆதலால் நகரசபை இனியாகிலும் இதனைக் கண்டிக்குமென எதிர்பார்க்கிரேம்.

---

## கந்தோரிலிருந்து 34 அரிசிப் புத்தகங்கள் காணமற் போய்விட்டன!

களுத்துறையிலுள்ள உப உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் கந்தோரில் இருந்து 34 அரிசிக் கூப்பன்கள் காணமற் போய்விட்டன. இதைக்குறித்து அதே ஊர் வாசியான சோமபாலா என்பவர் கைதியாக்கப்பட்டிருக்கிருர். அக் கந்தோரில் உள்ள லிகிதர் ஒருவர் ஓர் பூட்டில்லாப் பெட்டியில் இப் புஸ்தகங்களை வைத்துச் சென்றதாகவும், மறுநாள் புஸ்தகங்களைக் காணுது போலீசாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, விசாரணை நடந்தளவில், சோமபாலாவை 3 புஸ்தகங்களுடன் பிடித்ததாகவும் அறியவருகின்றது. சோமபாலா ஒன்று 20 ரூபா வீதம் 10 புஸ்தகங்களை ஒரு போசனசாலை முதலாளிக்கு விற்றுவிட்டதாகத் தெரிகின்றது.

---

## இறைச்சிக்கு விற்றபசு கன்று ஈன்றது!

மலட்டுப் பசுவென நினைத்து இறைச்சிக்காரனுக்கு விற்ற பசுவொன்று பலாங்கொடையிலே வெட்டுப்படுதற்கு முதல் நள்ளிரவு ஒரு கன்றை ஈன்றது! இறைச்சிக்காரன் பசுவையுங் கன்றையும் பெரும் விலைக்கு விற்கக்கூடியதாயிருந்தது.

---

அரசாங்கமேற்சபைஉபதலைவர் திரு. சிறில். டி. சோயிசா அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியி லிருந்து நீங்கிவிட்டார். அரசாங்க மேற்சபைத் தலைவர் பதவி முறைப்படி தமக்கேயுரியது என்பது அவருடைய நியாயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வழி வந்த மலையாளம்

முதலாம்பக்கத் தொடர்ச்சி

ரேம். இது சேர அரசர்களைப் பற்றியது. சங்கச் செய்யுட்களில் வந்துள்ள ஒருசில சொற்கள் இன்றும் மலையாள நாட்டில் வழங்கி வருகின்றன.

தமிழ்மொழிக்குரிய வட்டெழுத்துக்களே மலையாள நாட்டில் பூர்வ காலத்தில் கையாளப்பட்டு வந்தன. அங்குள்ள புராதன சாசனங்கள் தமிழ்மொழியிலேயே அமைந்துள்ளன. இவை தமிழ்மொழியே பண்டைக் காலத்தில் இந் நாட்டில் வழங்கியிருந்ததென்பதைப் புலப்படுத்தும். பிராசீன மலையாளக் கவிஞர்கள் தமது மொழியைத் தமிழ் என்ற பெயராலேயே அழைக்கின்றனர். ராமப்பணிக்கர் தமது பிரமாண்ட புராண மொழிபெயர்ப்பைக் குறித்து 'இதா ஞான் தமிழாய்க் கொண்டறியிக்கின்றேன்' என்று கூறியுள்ளார்.

## மலையாளத்திற்குத் தமிழே தாய்

ஆகவே சொற்கள், சொல்வடிவம், ஒலிமாற்றம், சொற்களின் அமைப்பு, சொற்பொருள், மொழியின் நடை, செய்யுள் — அமைதி, இலக்கியம், மலையாள நாட்டினர் இயற்றிய பூர்வ - இலக்கியங்கள். எழுத்துவரலாறு, மலையாளக் கவிஞர்களின் கருத்து முதலிய பல நெறிகளால் நோக்கினாலும் இடைக் காலத் திறுதியிலுள்ள தமிழிலிருந்து கி. பி 10-ஆம் நூற்றாண்டளவிலே பிராசீன மலையாள மொழி தோன்றத் தொடங்கியதென்று ஐயமின்றிக் கூறலாம். இதனால் தமிழும் மலையாளமும் தாயும் மகளும் என்ற தொடர்புடையன என்பது தெளிவாக விளங்கும். மலையாளம் தமிழைப்போல மூலத் திராவிட மொழியிலிருந்து நேரடியாய்ப் பிறந்ததென்றும், இரண்டும் சகோதரித் தொடர்புடையனவென்றும், மலையாளம் தோன்றி 2000 ஆண்டுகளுக்குமேல் ஆய்விட்டன என்றும் சிலர் கூறுவதெல்லாம் அபிமானம்பற்றிய கூற்றென்றுதல்ல வேண்டுமேயன்றி நேர்மையான ஆராய்ச்சியின் முடிவெனக் கொள்ளுதற்கில்லை.

மேற்கூறியவாறு தோன்றிய மலையாள மொழியின் தொடக்க நிலையில் உருத்திரியாத தமிழ்ச் சொற்கள் யாவும் உருத்திரிந்தன சிலவும் வழங்கிவந்தன. இவ்வுருத் திரிபும் பெரும்பாலும் நாட்டின் இயற்கையமைதிக்கேற்ப மெல்லோசை தருதற்பொருட்டே நிகழ்ந்தது. பின்னர் மலையாளமொழி தெலுங்கு, கன்னடம் முதலியவற்றைப்போல, வடமொழியோடு நெருங்கிய உறவுகொள்ளத்தொடங்கிற்று. வடமொழிச் சொற்கள் மிகுதியாக மலையாளத்தில் புகுந்தன. மிருது, கோஷம் முதலிய வடமொழியொலிகள் மேற்கொள்ளப்பட்டன. இத் தொடர்பினால் மலையாளம் தனது பூர்வ நிலையிலிருந்து பெரிதும் வேறுபாடு அடைந்தது. ஆயினும் அதற்குத் தமிழ்மொழியின் தொடர்பை முற்றிலும் அறுத்துக்கொள்ள முடியவில்லை. இன்றும் மலையாளமொழி தமிழர்க்கும், தமிழ்மொழி மலையாளர்கட்கும் எளிதில் அறிந்து கொள்ளக்கூடியனவாகவே உள்ளன. தெலுங்கு, கன்னட மொழிகளுக்கு இல்லாத இவ்வியல்பு இவ் இரு மொழிகளுக்குமுள்ள நெருங்கிய தொடர்பை நன்கு விளக்குகின்றது.

முந்திய எனது ரேடியோப் பேச்சிலே இடைக்காலத்தின் இறுதியில் சுமார் 10 - ஆம் நூற்றாண்டில், அக்காலத்தில் கேரளத்தில் வழங்கிய தமிழ்மொழி திரிந்து மலையாளமாகப் பருணமிக்கத் தொடங்கியதென்று கூறினேன். இதுபற்றி முன்காட்டிய பல காரணங்கள் தவிர, வேறு சில காரணங்களைக் குறித்து இன்று பேசலாமென்று நினைக்கிறேன்.

## சொல் வரலாறு

பண்டை மலையாளச் சொற்கள் சிலவற்றிற்கு மலையாள வியாகரண முறையில சொல் - வரலாறு காணுதல் இயலாது. அவற்றின் பூர்வ ரூபங்களாகிய தமிழ்ச்சொற்களை நோக்கினால்தான் அவ்வரலாற்றை உணரலாம். உதாரணமாக, வாதல் என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். இதற்கு மலையாளத்தில் வரலாறு யாதும் இல்லை. இதற்குரிய தமிழ் வடிவம் 'வாசல்' என்பது. சம்மதம் தம்மதம், சங்கடம் தங்கடம் என வருதல்போல, வாசல் என்பது வாதல் எனத் திரிந்தது. வாசல் என்ற தமிழ்ச்சொற்கும் இவ் வடிவில் வரலாறு கூறமுடியாது. 11-ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய செய்யுட்களில்தான் இச்சொல் காணப்படுகிறது. வானே ரபயன் இரவி குலோத்துங்கன் வாசல் வந்தால் (பெருந்தொகை, 1489) என்பது காண்க. இதனால் இவ்வடிவம்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

---

இந்தியா இலங்கைக்குக் கடனுக்க் கொடுக்கச் சம்மதித்த 15000 தொன் அரிசியில் 7500 தொன் அரிசி வருகிறகிழமை வந்து சேருகிறது.

X X X

இற்றைவரையில் ஆபிரிக்க சத்தியாக்கிரகிகள் 4460 பேர் கைதிகளாயினர்.

# ஐக்கிய நாடுகளின் அமைப்பு

## சமாதானத்தின் அச்சாணி

(திரு. ட்ரிக்வி லீயின் அறிக்கை)

உலகில் சமாதானம் நிலைத்திருப்பதற்கு ஐக்கிய நாடுகள் சங்கம மிக முக்கியமென்பதை அச்சங்கத்தின் தலைமைக் காரியதரிசி ட்ரிக்வி லீ இப்போது தமது ஆண்டறிக்கையில் சரியாக வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். இன்று நமக்குள்ள பிரச்சினைகளை அச்சங்கம் தீர்த்துவிடவும் இல்லை. அது தன கடமைகளை எல்லாம் குறைவற நிறைவேற்றி விட்டது என்றும் சொல்வதற்கில்லை. ஆயினும் ஐக்கிய நாடுகளே சமாதானத்துக்கு அச்சாணிபோன்றது என்பதில் ஐயம் வேண்டாம். இன்று வட அட்லாந்திக் ஒப்பந்தம் முதலியவற்றில அதிக நம்பிக்கை வைத்து, சமாதானத்துக்கு ஐக்கிய நாடுகள் உதவாது என்று கருதுவோரும் உளர். இத்தகைய எண்ணம் உண்டாவதற்குக் காரணம் என்ன என்பதையும் ட்ரிக்வி லீ விளக்கியிருக்கிறார். ஐக்கிய நாடுகள் சங்கத்தின் வேலைகளைச் சிலர் விளங்க அறிந்துகொள்வதில்லை. இதனாலும் அதில் அவநம்பிக்கை ஏற்படுகிறது என்கிறார் ட்ரிக்வி லீ. மேலும் ஐக்கிய நாடுகள் போர் முடிந்ததும் முளைத்த ஒரு உலக அமைப்பு. இனிக் கவலையே இல்லையென்ற எண்ணம் அன்று தோன்றியது. எல்லாம் இனிது நடைபெறாதது கண்டு இன்று அவநம்பிக்கை ஏற்படுகிறது என்று ட்ரிக்வி லீ கூறுகிறார்.

ஐக்கிய நாடுகளின் வேலைகள் எல்லாம் இனிது நிறைவேறும் என்ற பழைய எண்ணம் இன்று நீங்குகிறது. ஐக்கிய நாடுகள் என்பது யாது? அது செய்யக்கூடியது என்ன என்பவற்றை உள்ளபடி இன்று பலர் உணரத் தொடங்கியுள்ளனர். பலரும் பலவாறாக நினைப்பவற்றையெல்லாம் ஓரிடத்திற் கூடிப்பேசி அலசிப் பார்க்க வாய்ப்பளிக்கும் அமைப்பு இன்று உலகில் ஐக்கிய நாடு ஒன்றே. நீதியும் சுதந்திரமும் நிலைநிற்க இந்த வாய்ப்புப் பயன்படும். ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு இதற்கு முன் அகில உலகமும் ஒன்று சேர்ந்ததில்லை. ஐக்கிய நாடுகள் அமைப்பின் நாடுகளுள், பல படைகள் தந்து உதவுகின்றன. வட அத்லாந்திக் ஒப்பந்தம் பசிபிக் பாதுகாப்பு முறை இவைபோன்ற ஏற்பாடுகள் உலகமனைத்திற்கும் அன்ற அங்கங்கே ஏற்படுவதும் ஐ. நா. சாசனத்தின் கருத்துக்குப் புறம்பானதல்ல. இதையும் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். ஆனால் அந்த ஏற்பாடுகளெல்லாம் உலகத்தில் வல்லரசுகள் கட்சி கட்டிக்கொண்டு நிற்பதற்குள்ள ஏற்பாடுகள் அல்ல. அவை ஐக்கிய நாடுகளின் கருத்துக்கு ஒத்தபடி சேவை செய்வதற்குரிய ஏற்பாடுகளே. இது தான் முக்கியம். பின் தங்கிய நாடுகளில் பொருளாதார வளம் பெருகவும் சமூகநிலை உயரவும் ஐக்கிய நாடுகள் சபை மாபெரும் பணிசெய்து வருகின்றது; போன போரில் துயருற்ற மக்களுக்கு வேண்டிய உதவி செய்கின்றது.

எனவே ஐக்கிய நாடுகளுக்கு அமெரிக்கா இனியும் முன்போல் ஆதரவாயிருக்கவேண்டும். அவ்வாறே குடியரசுக் கட்சியும் ஜனநாயகக் கட்சியும் தங்கள் தேர்தல் அறிக்கைகளிற் கூறியுள்ளன. ஆனால் ஐக்கியநாடுகள் இயங்கும முறையை நன்றாக ஆராய்ந்து அதன் குறைகளைப் போக்கவேண்டும்.

ஐக்கிய நாடுகளை முடக்குவதற்குச் 'சோவியத்' கையாளும் வித்தைகள் இனிப் பலிக்காதவாறு செய்யவேண்டும், சோவியத்தின் தந்திரங்கள் இதற்கு முன் எத்தனையோ முறை ஐ. நா. தனது வேலையைச் செய்ய முடியாதபடி தடுத்து விட்டன.

கொரியப்போர் நிறுத்த ஒப்பந்தமும் கொரியப் போரும் முடிவுக்கு வர ஐக்கிய நாடுகளின் செயல்முறை உரம் பெற்றால் நலம். படை வலிமையைக் குறைக்குந் திட்டம் உருவாகி நடைபெறவும் ஐ. நா. வின் செயல் வழிகள் திறம்பட வேண்டும். இன்று சோவியத் தம்முடைய திட்டத்தைத் தவிர வேறு ஒன்றையும் கருதுவதற்கும் இணங்குகிறார்களில்லை. ஐக்கிய நாடுகளில் புதிதாய் நாடுகளைச் சேர்ப்பதற்கும் செம்மையான வழிவகைகள் தேவை. இவ்வாறு பல துறையிலும் ஐக்கிய நாடுகள் சபை சிறப்பாகத் தனது வேலைகளைச் செய்ய ஆவன செய்யவேண்டும். அது கடினமே; ஆனால் கருத்து ஒய்ந்து வெறுப்பு உண்டாக விடக்கூடாது; உள்ள செயல் முறைகளே எல்லாம் போதுமென்ற கவலையற்ற போக்கும வளரவிடக்கூடாது.

---

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

## இவ்வாரப் பலன்கள் 5—10—52——11—10—52

**மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.**

வேலைகள் திருத்தி அமைக்கக் கூடிய வாரம். மன அமைதி இராது. கடினமாய் உழைத்தல் வேண்டும். அந்நியராலும் அயலவராலும் அதிக உதவியுண்டு.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

சொந்த அலுவல்கள் பெருந் தொந்தரவைக் கொடுக்கும். செலவுக்குத்தக்க வருவாய் இராது. சமீபத்தில் முக்கிய மாற்றங்கள் ஏற்படுத்தல் நன்றாகாது.

**மிதுனராசி மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

குடும்ப வாழ்க்கை சமாதானமாக இராது. தொழில் முறையில் நன்மையுண்டு. பணநிலையும் சீராகும். நண்பர்கள் உதவிகிடைக்கும்.

**கடகராசி புனர்பூசம் 4மபாதம் பூசம் ஆயிலியம்.**

சொந்த முறையிலோ குடும்ப முறையிலோ தொந்தரவுகள் ஏற்படாது தடுப்பது கஷ்டமாகும். நண்பர்களை உபசரிப்பதில் செலவு ஏற்படும். ஆனால் அதற்கு வேண்டிய பணம் கிடைக்கும்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம, 1ம் பாதம்.**

இல்லத்தில் எக்காரியத்திலும் முடிவான தீர்மானம் செய்ய இயலாது. மனம அலைந்து திரியும். உற்ற நண்பர்களிடம் புத்திமதி கேட்டல் நன்று. வார முடிவில் குடும்ப ஐக்கியமும் காத்திராப்பிரகாரமான பொருள் வருவாயும் ஏற்படக்கூடும்.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம பாதம.**

போக்குவரத்து வாகனங்களால் அதிக செலவு ஏற்படக்கூடும். ஞாயிறும் திங்களும் தொந்தரவைக் கொடுக்கக்கூடும். விபத்துக்களுக்கு எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும். மற்றைய நாட்களில் நிலைமை சீரடைந்தாலும் குறிப்பிடத்தக்க நன்மை ஏற்படாது

**துலாம் சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

புது முயற்சிகளுக்கு முதல் இரண்டு நாட்களும் உகந்தவை. செவ்வாயும் புதனும் கவனமாகக் கழித்தல் வேண்டும். ஏனைய நாட்கள் மறுபடியும் நன்மைக்குரியன வாகும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.**

வாக்குவாதம் தொடுக்கும் மனப்பான்மை முற்படும். தொழில முறையிலும் சிநேகரிடத்திலும் தப்பபிப்பிராயங்கள் எழக் கூடும். வியாழன், வெள்ளியும், சனி காலையும் இந்தவகையில் மிகவும் ஆகாத நாட்கள்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம.**

உடல் நலத்தைப் பிரத்தியேகமாகப் பேணுதல் வேண்டும். வியாபாரத்துறையில் நயம் உண்டெனினும் மன அமைதியிராத தன்மையோடு கூடுதலான பொறுப்புக்களையும் ஏற்கவேண்டி வரும். சனிக்கிழமையன்று அவதானமாயிருத்தல் வேண்டும்.

**மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

செலவு அதிகரித்துக்கொண்டே வரும். செவ்விதாகத் தொழிலை ஆற்றினும் மேலதிகாரிகள் குற்றம் பிடிக்க முயலுவர். சிரமமாய்க் கடமையாற்றல்வேண்டும் எச்சரிக்கையாக இராவிடில் மற்றவர்களின் ஏமாற்றத்துக்கு ஆளாக வேண்டி வரும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

நண்பர்களின் உதவி ஏராளமாகக் கிடைக்கும். பணநிலை குணமானாலும் செலவு கூடிக்கொண்டே வரும. தொழில் முறையிலே சிறு தொந்தரவு வாரமத்தியில் ஏற்படக் கூடும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

கணவனோடு அல்லது மனைவியோடு அபிப்பிராய பேதம் நிகழக் கூடும். காணி சம்பந்தமான சில தொந்தரவுகள் உண்டாக இடமுண்டு. ஆனால் இவற்றைச் சமாளிக்கக்கூடிய வல்லமை இருக்கும். வாரமுடிவில் அதிட்டலாபம்கிடைக்கக்கூடும்.

சமூக வாழ்க்கையைச் சித்திரிக்கும்

சுசீலாவின் காதல்

யாழ். நகர மண்டபத்தில்

ஐக்கிய இயக்க உத்தியோகத்தர்களால்

1952 மார்கழி முதல் வாரத்தில்

சைவ பரிபாலன சபை

நாவலர் ஆச்சிரம நிதிக்காக

மிக விமரிசையாக நடத்தப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தொண்டர் திருநாள்

## உருத்திர மந்திரம் ஓதி உய்தியடைந்தார

### உருத்திர பசுபதி நாயனர்

சோழ நாட்டிலே திருத்தலையூரிலே பிராமண குலத்திலே சிவபெருமானுடைய திருவடிக்கன்பு பூண்ட பசுபதியார் என்பவரிருந்தார். அவர் தண்ணீரிலே கழுத்தளவுக்குச்சென்று தலையிலே கைகளைக் குவித்து சிவபிரான்மீது அன்புடையராய் உருத்திரமந்திரத்தை ஓதுவாராயினர்.

இவ்வாறு அல்லும் பகலும் உருத்திர மந்திரத்தை அன்புடன் ஓதிவருங்காலத்தில் சிவபெருமானுடைய திருவடிகளையடைந்தார். உருத்திர மந்திரத்தை அன்புடன் ஓதித் திருவடிப்பேறு பெற்ற காரணத்தால் உருத்திர பசுபதி நாயனர் என்னும் பெயர் அவருக்குண்டாயிற்று.

நீடும் அன்பினில் உருத்திரம்
ஓதிய நிலையால்
ஆடுசேவடி அருகுறஅணைந்தனர்
அவர்க்குப்
பாடுபெற்றசீர் உருத்திர
பசுபதி யாராம்
கூடு நாமமும் நிகழ்ந்தது
குவலயம் போற்ற.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு
இல- 8290
சுதுமலை ஐயன் சின்னப்பொடி
—வழக்காளி.
விரோதமாக
ஆனைக்கோட்டை, சாவல்க்கட்டு
காத்தி சரவணை
கைம்பெண் தெய்வானை
—எதிராளி.

மேற்குறித்த கோட்டு இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கமிஷன் கட்டளைப்படி இதன் கீழ்க் காணப்படும் ஆதனம். 1952-ம்ஆ நவம்பர்மீ 15உ (ஐப்பசி 30) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல விற்கப்படும்.

தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 2927–76 ம் இதில் ரூபா. 2500 க்கு 18-10-51 தொடக்கம் 11 - 3 - 52 வரையும் ஞூ 1 க்கு 100-க்கு 8 வீத வட்டியும், அதன் பின் தீர்வையின் மொத்தத் தொகைக்கு இறுக்கப்படும் உவரைக்கும் ஞூ 1 - க்கு, 100-க்கு, 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 306-90-ம் (அதாவது இதுவரை பொறுத்த செலவு ரூபா 237 - 83, வெலியாத்துச் செலவு ரூபா 34 - 57, இனிமேல் வருஞ் செலவ, ரூபா 34-50)

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக், வலிகாமம் மேற்குப் பகுதி; மானிப்பாய்க்கோவிற்பற்று ஆனைக்கோட்டை இறை. விரதன் வழவும், கண்டமட்டமும். இல-பர- 10 உடன $\frac{5}{16}$ - ம் கிணறும செய் பயிர்களும் ஓட்டு வீடும் எல்லை கிழக்கு கணபதி வேலாயுதருக்கும், நன்னி எல்லுப்போலைக்கும் பகாளருக்குமுரிய காணிகள், வடக்கு ஒழுகை, மேற்கு எதிரிக்கும் பகாளருக்கும் உரிய காணி, தெற்கு நன்னித்தம்பி பெண் சின்னக்குட்டிக்குரிய காணி; இவ்வெல்லைக்குட்பட்ட காணியிலும் அதைச் சேந்தவைகளிலும். இதற்குக் கிழக்கெல்லைக் காணிகளில் கணபதி வேலாயுதருடைய காணிக்கும், மேற்கெல்லைக் காணிக்குமுரிய கிணற்றுப் பங்குகளும், வழிவாய்க்கால் உரித்தும் புறநீங்கலாக மிகுதியடங்கலும்.

பெ. முத்துத்தம்பி
வெந்தீஸ் கம்மிஷனர்.
சுதுமலை தெற்கு
மானிப்பாய்
26—9—52.
M. 127 3—10—52.


## உடுவில் சரோஜினி நூல்நிலையம்

உடுவில் சரோஜினி நூல்நிலையத்தில் நவராத்திரி பூசை நடைபெற்று விஜயதசமியிலன்று இருபத்தொரு ஆண்களுக்கும் பெண்களுக்கும் சிவதீக்ஷையும் இரு சிறுமிகளுக்கு அட்சர ஆரம்பமும் செய்யப்பெற்றன.

## தமிழ் வழி வந்த மலையாளம்

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

இடைக்காலத்து இறுதியில் சாமானிய வழக்கில் புகுந்த தமிழ் என்பது தெளிவு இதன் பூர்வ ரூபம் 'வாயில்' என்பது. 'அடையாவாயில்' எனச் சிறுபாணுற்றுப் படையில் வருகிறது. இதற்குரிய பொருள் 'முகப்பிடம்' அல்லது 'வீட்டின் முகப்பு' என எளிதில் விளங்கும். இதுவே இச்சொல்லின் பிறப்பு வரலாறு. சிலவு, செறுக்கன் முதலியவையும் வேறு உதாரணங்களாம். செலவு, சிறுக்கன் என்பனவே இங்ஙனம் திரிந்தன 'தாக்கு கோடி தனஞ் செலவென்பவே' என்ற சிவரகசியமும், 'ஆலினிலை வளர்ந்த சிறுக்கன்' என்ற பெரியாழ்வார் 1, 4, 7 திருமொழியும் அறியத்தக்கன. இவ்வுதாரணங்களால் மலையாளச் சொற்கள் பலவற்றின் பூர்வவடிவம் தமிழில் உள்ளதென்பதும், அவ்வடிவம் திரிந்து திரிந்து மலையாள வடிவங்கொண்டதென்பதும், இங்ஙனம் வடிவம் மாறியது சுமார் 10-ஆம் நூற்றூண்டிலே என்பதும் நன்கு புலப்படுகின்றன.

இந்நெறிக்குமாறுகத்தமிழ்ச்சொல் மலையாள மொழியினின்று திரிந்து வந்ததாகவேனும் அதன் பிறப்புவரலாறு மலையாளத்தில் உள்ளதாகவேனும் காண இயலவில்லை. இதனுல் மலையாளமொழி தமிழ்மொழிக்கு மிகவும் பிற்பட்டகாலத்தில் தோன்றியதென்பது வெளிப்படை.

### மரபுத் தொடர்கள்

தமிழிலே இடைக்காலத்து இறுதியில் தோன்றிய சில மரபுத்தொடர்கள் பண்டை மலையாள இலக்கியங்களில் காணப்படுகின்றன. உதாரணமாக, திருவுள்ளம் எனக் கம்பன் வழங்குகிறுன் (கங்கை 67); இது ராம சரிதத்திலும் (2, 3) வருகிறது. திருமேனி (திருவாய்மொழி 9, 7, 3, திருவடி (நான்முகன் திருவந்தாதி, 68) முதலியனவும் பிறஉதாரணங்கள். இதனுல் தமிழ் தோன்றி வளர்ந்து இடைக்காலநிலைமை அடைந்ததன் பிற்பாடு, அதினின்றும் பிராசீன மலையாளத்திலுள்ள மரபுத் தொடர்கள் கொள்ளப்பட்டமை நன்ருக வெளிப்படுகின்றது.

### சந்தி யமைப்புக்கள்

தமிழில் பிற்காலத்துத் தோன்றிய சில சந்தியமைப்புக்கள் பண்டை மலையாளத்தில் உள்ளன. உதாரணமாக 'வெவ்வேறு' என்றதனைக் கூறலாம். வேறு வேறு என்ற இரண்டு சொற்கள் ஒன்றுபட்டுச் சந்தி மருவிவந்தது. முற்காலத்துத் தமிழில் இவ்வழக்குக் காணப்படவில்லை. 'பிறப்பிணுக்கம் வேறுவேறியல' என்றனர் தொல்காப்பியர் (பிறப். 1). ஆனுல் 'வித்தகமும் விதிவசமும வெவ்வேறே புறங்கிடப்ப' எனக் கம்பன் பாடுகின்ருன். எனவே இடைக்காலத்தின் இறுதியில் புகுந்த இப்பிரயோகமே மலையாள மொழியில் இடம்பெறலாயிற்று. இக் காரணமும் முன்பு கூறிய முடிவை வலியுறுத்துகிறது.

இவ்வாருக, எந்த நெறியில் நோக்கினும் தமிழின் உட்கிளையே மலையாளம் என்பது தெளிவாகிறது. உட்கிளையாகப் பிரிந்த காலமும் 10 - ஆம் நூற்ருண்டின் அளவிலாகும்.

சமயப் பிரசாரம்:

## சைவப் பிரசங்கம்

நாள்: நந்தன புரட்டாசி உகஉ
(6-10-52) திங்கட்கிழமை.
நேரம்: மாலை 6½ மணி.
இடம்: சைவாச்சிரம
நாவலர் மண்டபம்.
நிகழ்ச்சி: கடவுளாராதனை
பிரசங்கம் — 'சேக்கிழார்'
பிரசாரகர்—ஜொகூர் சமஸ்தானம்
(சிங்கப்பூர்) புலவர்மணி
திரு.S.பொன்னம்பலம் J. P.

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்

சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
2—10—52.
M. 128 3—10-52.

## நவாலி வடக்கு சேவா சங்கம்

நவாலி வடக்கு சேவா சங்க 7-வது ஆண்டு நிறைவுவிழா 27-9-52 சனிக்கிழமை பிறபகல் நாச்சிமார்கோயில் வீதியில் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. V. வீரசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் திரு. C. S. நவரத்தினம் அவர்களின் முன்னுரையின்பின் ஆண்டு அறிக்கை வரவு செலவுக் கணக்கு ஆதியன வாசிக்கப்பெற்றன.

அரசவாசல் முதலியார் திரு. C தியாகராசா முகாந்திரம் திரு. V. மகேசன், காரியதரிசி திரு. J. M சபாரத்தினம் பண்டிதர் திரு. இளமுருகனுர் ஆகியோர் சொற்பொழிவுகள் ஆற்றியபின் சங்கீதக் கச்சேரியுடன் பணக்காரன் என்னும் நாடகமும் நடிக்கப்பெற்றது.

### பெண்களுக்குப் பொருத்தமற்ற விளையாட்டுகள்

"பெண்களுக்குப்பொருத்தமற்ற உடற் பயிற்சி விளையாட்டுகளில் ஈடுபட விரும்பும் இக்காலப் பெண்களின் மனப்பான்மை கண்டிக்கத்தற்குரியது" என்று மேற்கு மாகாண சனசமூக நிலையங்களின் தலைவர் திரு. D. J. சேனரத்தின சனசமூக நிலையக் கூட்டமொன்றிற் குறிப்பிட்டார், பங்குபற்றத் தகுதியற்ற விளையாட்டுகளில் பெண்கள் கலந்துகொள்வதைத் தடைசெய்ய வேண்டுமென்றும் அவர் சொன்னுர்.

## 500 அரிசிப்புத்தகம் வைத்திருந்தார்

### 7500 ரூபா பிணை

கொட்டாஞ்சேனை, புளுமந்தால் தெருவைச் சேர்ந்த M. புகாரி என்பவர் தமவசம் 500 அரிசிப் புத்தகங்களடங்கிய தகரப் பெட்டியொன்று வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டிப் பிரதம நீதிபதி முன் வழக்குத் தொடரப்பட்டது. இவரை, பிரதம நீதிபதி, 7500 ரூபாய் பிணைக்கட்டும் [illegible] டார். அவ்வாறே இவர் 7500 ரூபாய் பிணையில் விடப்பட்டுள்ளார்.


## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், சிதாரி சப்பல்தெரு, 9-ம் நம்பர்வீட்டில் அடைவு பிடிப்பவர்களாகிய யோசேப் அன் கோ. மனேஜர், எஸ். பி. யோசேப் அவர்களிடம் 1946-ம் ஆண்டு மார்கழிமாதம் 21-ந் திகதி தொடக்கம் 1951-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30-ந் திகதிவரையில் வைக்கப்பட்டுத் தவணை தப்பிய அடைவு நகைகள் 1952-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் மேற்படி இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

இடாப்பு மேற்படி இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், 16-9-52.
கோணமலை ஐயாத்துரை
வெந்தீஸ்மேஸ்தர்.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
—நகை—
வியாபாரிகள்
=o=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம்ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

Std. 14 20-11-46—20-11-49.
S. கனகசபை
சிருப்பர்.

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
ருணிமார்க் ஓடுகள்
13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.
Std. 2


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai. Jaffna, at their Press. the Saiva Prakasa Press. Vannarponna, Jaffna on Friday. October 3. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org